1982 மார்ச் 4]

கடிதத்தின் விவரங்களையும், அதற்கு மத்திய கப்பல் போக்குவரத்துக் கழகம் எழுதிய பதில் விவரங்களையும்—அது மிக முக்கியமான விஷயமாக இருப்பதால்—சபையில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், அதற்கும் இதற்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை. அது தேவை என்று தனியாகக் கேட்டால், அதைப்பற்றி சிந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

அரசு கட்டுமான பணிகளுக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும் திட்டம்.

*வினா எண் 359.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரசு கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை Rate உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பொதுப்பணித்துறையைச் சார்ந்த வட்டங்கள் அளவில், ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் புதிய விலை விவரப்பட்டியல்கள் Shedule of Rates தயாரிக்கப்படுகிறது. ஒப்பந்தக்காரர்கள் அளித்திடும் விலை விவரங்கள் இத்துடன் ஒப்பிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியேற்கும் அதிகார வரம்பிற்கு உட்பட்டவாறு ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும் சூழ்நிலை எதும் எழவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை சார்ந்த கட்டுமானப் பணிகளை ஒப்பந்தக் காரர்கள் ஒப்பந்தம் கேட்டு எடுத்தபின்பு, அரசாங்கம் குறிப்பிட்டுச் சொல்கிற அந்தத் தேதிக்குள் அந்தப் பணிகளை முடித்துக்கொடுக்காமல், காலதாமதம் செய்கின்றனர். இதனால் அரசாங்கத்திற்கும் பெயர் கெடுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் பொதுப்பணித் துறை கட்டுமானப் பணிகள், மற்றும் மிகமிக முக்கிய பணிகளை இந்த ஒப்பந்தக்காரர்களிடத்தில் கொடுக்காமல், அரசாங்கமே ஒரு தனி நிறுவனத்தின் மூலம் இந்தக் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு முன்வருமா ? அத்தகைய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்களின் இந்த நிலைமையின் காரணமாக பொதுப்பணித் துறைக்கு ஏற்பட்டு வருகிற அவப்பெயரைத் தடுக்கும் விதத்தில், தற்போது

அரசு ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஒரு வேலையை விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்த வேலை முடிகின்ற வரைக்கும் அந்த ஒப்பந்தக்காரருக்கு வேறு வேலை கொடுக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். மேலும், வேலையில்லாமல் இருக்கும் பொறியியல் பட்டதாரிகள் கூட்டுறவு சங்கத்தை அமைத்து, அவர்கள் தங்களுக்கு அந்த வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று கேட்டு வருகிற காரணத்தால் அவர்களுக்கும் தருகின்ற வகையில் இந்தச் சூழ்நிலை மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் 360—திரு. ந. குலசேகரபாண்டியன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் (E. O. A. H.) கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நியமனம் செய்யப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களில் (E. O. A. H.) கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆணை எண் (நிலை) 2319, வேளாண்மை, நாள் 19—10—1981-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணை உயர்நீதி மன்ற தடை உத்தரவினால் செயல் படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ந. குலசேகரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு இன்றைக்கு கிராமப்புறங்களில் இன்றியமையாததாக இருக்கிறது என்பதை உணர்ந்து, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டபோதிலும், கோர்ட் தடைஉத்தரவு பிறப்பித்து இருப்பதால், அது சரிவர நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தத் தடையை நீக்க அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? அந்தத் தடையை விரைவில் நீக்கி, அந்த ஆணையை விரைவில் அமல்படுத்த அரசு முன்வருமா ?